REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

லர் 2] சென்னை: கார்த்திகை 1உ செவ்வாய் (16—11—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 2உ புதன் (17—11—54) [இதழ் 133

'எரியும் நெருப்பில் ஊற்றப்படும் எண்ணெய்'

இஸ்ரேல் நாட்டுப் பிரதமர், இஸ்ரேல் மக்கள் சபையில் பேசுகையில், 'எகிப்துக்குக் கிடைக்கும் அமெரிக்க ஆயுத உதவி, எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போன்று, எகிப்தின் உள்நாட்டுக் குழப்பங்களை மேலும் அதிகப்படுத்துவதாகும்' என்றும் 'அதன் விளைவாக, அக்குழப்பங்கள் எகிப்து நாடு மட்டுமின்றி, அதன் எல்லைகளுக்கப்பாற்பட்ட நாடுகளிலும் பரவ வழிகோலுவதாகவும் ஆகும்' என்றும் கூறியிருக்கிறார்.

வெற்றிக்குரல் வேதனை கீதமாகிறது

வேலூரைத் தொடருகிறது நீலமலை!

காங்கிரஸ் ஆணையை மீறி காங்கிரஸ்காரர் போட்டி

நீலமலை மாவட்டக்கழகத் தேர்தலில் கட்சிக்குள் குழப்பம்

மலபார் நீங்கலாக மற்ற மாவட்டக் கழகங்கள் அனைத்தும் தங்கள் ஆதிக்கத்தில்தான் உள்ளதாக, தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பீடம் தலைவிக்கம் கொண்டது. அரசியல் ஒழுக்கத்தை அறவே தூக்கி எறிந்துவிட்டு, கட்சி ஆதிக்கம் ஒன்றையே குறியாகக் கொண்டு, அதைப் பெறுவதற்காக, காங்கிரஸ் தலைமைப் பீடம் எடுத்துக் கொண்ட எண்ணத் தொலையாத நடவடிக்கைகள், ஏளனத்துக்குரியது என்பது மட்டுமல்லாமல், நகர மாவட்ட ஆட்சித்துறை எதிர்கால நலனில் அக்கரை உள்ளவர்களை, இரத்தக் கண்ணீர் உகுக்க வைக்கக் கூடியனவுமாகும்.

வட ஆற்காடு மாவட்டக் கழகத் தலைவர் தேர்தலில், அபேட்சகர்களைப் பொறுக்குவதில் காங்கிரஸ் மேற்கொண்ட ஒழுங்கற்ற முறையின் எதிரொலி, முதல் முதலாக வெடித்தது. காங்கிரஸ் தலைமை, நியமனம் செய்த ஒருவரை, மற்றொரு காங்கிரசார், தலைவர் தேர்தலில் போட்டியிட்டு தோற்கடித்தார். முன்னாள் ஆற்றிய முறையற்ற செயலுக்குப் பரிசாகக் கிடைத்த மூக்கறுப்பை மறைத்துக்கொள்ள, ஒழுங்கு நடவடிக்கை என்ற துருப்பிடித்த ஆயுதத்தை, தம்மை மூளியாக்கிய காங்கிரஸ் கட்சியினர் சிலர்மீது வீசியெறிந்தது காங்கிரஸ் தலைமை!

தலைமைக்கு, மனச்சாந்தி கிடைத்திருக்கக்கூடும்! ஆனால், வட ஆற்காடு மாவட்டக் கழகமும் காங்கிரஸ் கூடாரத்திற்குள்தான் என்று பிறர் பெருமையாகப் பேசிக்கொள்ள வேண்டும் என்பதற்காக, காங்கிரஸ் தலைமை, துவக்க முதல் பாடுபட்டு வந்ததே, அதற்கு ஏற்பட்டது என்ன? முழுத் தோல்வி! இத்துறையில், தலைமை, மூளியாக்கப்பட்டுக் கிடக்கிறது!

வேலூரைத் தொடருகிறது, நீலமலை!

நீலமலை மாவட்டக் கழகத்தின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 26. அதில் 5 சுயேச்சை உறுப்பினர்கள் நீங்கலாக 21 காங்கிரஸ் உறுப்பினர்கள் உள்ளனர்.

தலைவர் தேர்தலுக்கு தோழர் சி. பி. ராஜன் அவர்களை ஒரு அபேட்சகராக தமிழ்நாடு காங்கிரஸ் நியமித்தது. அவரை எதிர்த்து மற்றொரு காங்கிரஸ்காரரான தோழர் எம். கே. நஞ்சா கவுடர் போட்டியிட்டார். இரு அபேட்சகர்களுக்கும் சரிசமமாக 12 வாக்குகள் கிடைத்தன. எனவே, குலுக்குச் சீட்டு போடப்பட்டது. அதில் காங்கிரசால் நியமிக்கப்பட்ட தோழர் ராஜன் பெயர் வந்துவிட்டது. அவர் நீலமலை மாவட்டக் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தோழர் ராஜன் அவர்களை எதிர்த்துப் போட்டியிட்டவர் மேற்படி கழக முன்னாள் துணைத் தலைவராவார்.

தலைவராக எவரை நியமிப்பது என்று ஆராய நடைபெற்ற மாவட்டக் கழக காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர் ராஜன் அவர்களை ஆதரித்து 14 உறுப்பினர்களும், தோழர் நஞ்சா கவுடருக்குச் சாதகமாக 7 வாக்குகளும் கிடைத்ததாம். எனவே, தலைவருக்கான அபேட்சகராக தோழர் ராஜன் அவர்களையே, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தோழர் கரையாளர் பொறுக்கி எடுத்தாராம்.

காங்கிரஸ் அதிகாரத்தின் கீழ் நீலமலை மாவட்டக் கழகம் இருந்தபோதிலும், இனி அங்கு ஏற்பட இருக்கிற குழப்பத்திற்கு, தலைவர் தேர்தலில் காங்கிரஸ் கட்சியினருக்குள் இப்பொழுது உண்டாகியுள்ள உட்பகை, ஒரு முன் அறிவிப்பாகும். இதனால், கழகம் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை மறந்து, 'அதிகாரத்தில் எவர்' என்ற அனர்த்தத்திற்கு இரையாகும்.

வட துருவத்தைக் கடந்து....!

உலகின் வட துருவத்தைக் கடந்து ஐரோப்பாவுக்கு விமானப் போக்குவரத்து ஏற்படுத்த கலிபோர்னியாவிலுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் எனும் இடத்தில் விமானப் போக்குவரத்து ஆரம்பிக்கப் பட்டது.

ஸ்காண்டிநேவியாவைச் சேர்ந்த விமானம் ஒன்று, 40 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு, லாஸ் ஏஞ்சல்ஸ் எனும் இடத்திலிருந்து 5,800 கல் தொலைவுள்ள கோபன்ஹேகன் எனும் இடத்திற்குப் புறப்பட்டது. இடையில் இரண்டு விமான நிலையங்களில் மட்டுந்தான் அவ்விமானம் தங்குமாம். மேலும், அது 5,300 கல் தூரத்தையும் 22 மணி நேரத்தில் கடந்துவிடுமென்றும் கூறப்படுகிறது.

'கோவில் சொத்துக்களைப் பிரித்துக் கொடுங்கள்'

'அனைத்தும் துறந்த' சாதுக்களின் கோரிக்கை

அகில இந்திய சாதுக்கள் மாநாட்டில் தீர்மானம்

பாட்னா, நவ. 15—

மூன்று நாட்கள் நடைபெற்ற அ. இ. சாதுக்கள் மாநாடு, தீர்மானம் ஒன்றின் மூலமாக, கோவில்கள், மடங்கள் ஆகியவைகளுக்குச் சொந்தமான எல்லா சொத்துக்களையும் ஏழை சாதுக்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்றும், இந்திய சர்க்கார் அதற்காக தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் வற்புறுத்தியிருக்கிறது.

நாட்டின் மக்கள் பற்றிய பிறப்பு இறப்புப் பட்டியலில், சாதுக்களுக்குத் தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி, அவர்களை தனிப் பிரிவில் பதிவு செய்ய வேண்டுமென்றும் சாதுக்கள் மாநாடு மற்றொரு தீர்மானம் நிறைவேற்றிருக்கிறது.

இதுபோன்ற தனிப் பிரிவு அவசியம் என்பதற்கு சாதுக்கள் மாநாடு சரியான காரணமும் காட்டியதாம்.

சாதுக்கள் உலக பந்தத்தைத் துறந்தவுடன், அவரது முற்கால வாழ்க்கை பற்றிய எல்லா விபரங்களையும் வெளியிட முடியாதவாறு தடுக்கப்படுகிறார்கள்; அவர்களது பிறந்த இடம், தாய் தந்தையரின் பெயர்கள் இவைகளைக்கூட வெளியிடக்கூடாமல் தடுக்கப்படுகின்றனர்; ஆகவே, அவர்களுக்கென்று, பிறப்பு-இறப்புப் பட்டியலில் தனிப் பிரிவில் சாதுக்களின் பெயர்கள் இருக்க வேண்டுமென்று சாதுக்கள் மாநாடு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

பிருந்தாவனம், அயோத்தியா, காசி, அரித்துவார், ஜெகன்னாத், பூரி, பீகார் ஆகிய இடங்களிலிருந்து 150-க்கு மேற்பட்ட சாதுக்கள் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டார்களாம்.

தர்பங்காவைச் சேர்ந்த ராம் நாராயண் தாஸ்ஜி என்பவர் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

அகில இந்திய சாதுக்கள் கழகத்திற்கு அகமதாபாதைச் சேர்ந்த ராம்சரண் சாஸ்திரி புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கோபி தாலுகா விவசாயிகள் மாநாடு

பொதுச் செயலாளர் தலைமை தாங்கினர்

கோபி நாகையா தியேட்டரில் 15-11-54 காலை 10-30 மணிக்கு கோபி தாலுகா விவசாயிகள் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான விவசாய மக்களும், பொது மக்களும் கூடியிருந்தனர்.

வரவேற்புக் கழகத்தலைவர் திரு. பி. ஏ. சிவக்கொழுந்து யாவரையும் வரவேற்றுசொற்பொழிவாற்றினர்.

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி மாநாட்டுக்கொடியைஉயர்த்தி வைத்து சொற்பொழிவாற்றினர்.

சென்னை முன்னாள் மேயர் திரு. டி. செங்கல்வராயன் மாநாட்டைத் திறந்துவைத்து சொற்பொழிவாற்றினர்.

பொதுச் செயலாளர் அண்ணதுரை அவர்கள் மாநாட்டுக்குத் தலைமைவகித்து முன்னுரையாற்றினர்.

கோபி நகர சபைத்தலைவர் திரு. ஜி. எஸ் லெட்சுமணன், திரு. பி. ஜி. கருத்திருமன் எம். எல். ஏ., சொற்பொழிவாற்றினர்கள்.

முற்பகல் நிகழ்ச்சி 1 மணிக்கு இனிது முடிவுற்றது.

மீண்டும் மாநாடு மாலை 3 மணியளவுக்கு ஆரம்பமாயிற்று.

கட்சியின் அடிப்படை கொள்கைக்கு முரணாக நடக்கிறார்கள்

பட்டம் மந்திரிசபை மீது எர்ணாகுளம் பி.-சோ. கட்சி குற்றச்சாட்டு

'பட்டத்தின் ராஜினமா மனிதத்தன்மையை வளர்க்கும்' என லோகியா கருத்து

பிரஜா-சோஷலிஸ்டு கட்சியின் எர்ணாகுளம் நகர கிளைக் கழகம், திரு-கொச்சி மந்திரி சபை பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடனே அகில இந்திய மாநாடொன்றைக் கூட்டவேண்டுமென்று கோரியுள்ளது.

பி.-சோ. கட்சியின் திட்டங்களை நிறைவேற்ற திரு-கொச்சி மந்திரி சபை தயாரில்லை என்றால், பி.-சோ. கட்சியினர் அந்த மந்திரி சபையுடன் எவ்விதத் தொடர்பும் கொள்ள மாட்டார்கள் என்று அறிவிக்கவேண்டுமென மேலும் கோரப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

பாகிஸ்தானின் உள்நாட்டு, காஷ்மீர் விவகார அமைச்சர் இஸ்கந்தர் மீர்சா, விரைவில் டெல்லி செல்லலாம் என்று கூறப்படுகிறது.

திரை மறைவில் சதிச் செயலா?

பாக். பிரதமர் மறுப்பு

பாகிஸ்தானில் இராணுவ அதிகாரம் மேலோங்கி நிற்பதாகவும், திரை மறைவிலிருந்து கொண்டே இராணுவம் சதிச் செயல்கள் புரிவதாகவும் வெளியாகிக் கொண்டிருக்கும் செய்திகளை, பாகிஸ்தான் பிரதமர் மறுத்திருக்கிறார்.

கவுந்தப்பாடியில் அண்ணா

தி. மு. கழகத் தோழர்கள் வரவேற்பு

15—11—54 காலை 9 மணிக்கு, கார் மூலம் ஈரோட்டிலிருந்து கோபி விவசாயிகள் மாநாட்டுக்குச் சென்ற பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களையும், தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், அ. பொன்னம்பலனார், கே. ஆர். இராமசாமி, கே. ஏ. மதியழகன், சி. வி. இராஜகோபால் ஆகிய தோழர்களை கவுந்தப்பாடி தி. மு. கழகத்தார் வரவேற்று மலர்மாலைகள் சூட்டினார்கள். ஊர்வலமாக சந்தைப்பேட்டைக்கு அழைத்துச்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 16—11—1954 செவ்வாய்

‘அன்னாபிஷேகம்’

‘வறுமையின் கோரப் பிடியிலிருந்து தப்ப முடியவில்லை;
‘குழந்தையின் வேதனையைத் தாங்க இயலவில்லை;
‘தான் பெற்ற செல்வத்தின் குரல் வளையை நெரித்துக் கொன்றான்;
‘கொலைதான்; கோரச் செய்கைதான்; ஆனால், வறுமை அவ்வாறு செய்யத் தூண்டியது;
‘கருணை காட்டலாம்; பரிதாபத்துக்குரியவன்’,
என்று நீதிபதிகள் சிபாரிசு செய்தார்கள்.

தன் குழந்தையை வறுமையின் காரணமாகக் கொன்ற ஒருவர் பற்றிய வழக்கைப் படித்தவர்கள் அறிந்திருப்பார்கள், இச்செய்தியை—அச்செய்தி படம் பிடித்துக் காட்டும் தமிழ்நாட்டு நிலையை!

‘வறுமையின் கொடுமை தாங்காமல், தன்னை ஈன்றெடுத்த தாயின் கழுத்தை அறுத்துக் கொலை செய்தான், தாயின் சம்மதத்துடன்,’— என்று, முன்பு ஒரு வழக்கு நடைபெற்றது;—பொதுமக்கள் அறிந்திருப்பார்கள்.

ஆயிரம் உதாரணங்கள் காட்டலாம்—நம் நாட்டிலே வறுமை புரியும் ‘திருவிளையாடல்’களை விளக்க.

‘குடியிருக்க மாளிகை கிடைக்கவில்லையே’, என்ற வறுமையல்ல;

‘மாலை நேரத்தில், அழகிய காட்சிகளைக் காண குற்றாலம் செல்லப் பணம் இல்லையே’ என்ற வறுமையல்ல;

‘காரில் செல்ல முடியாமல், நம்மிடம் வறுமையிருக்கிறதே—அது என்று போகுமோ’, என்ற கவலையல்ல;—அப்படியும் கவலைப்படுவோர் இருக்கிறார்கள்.

ஆனால், நாட்டிலே பெரும்பான்மையினரிடையே காணப்படும் வறுமை, ‘ஒரு கவளம் சோறு கிடைக்கவில்லையே’, என்பதுதான்!

நாட்டை ஆளும் சர்க்காரோ, ‘உணவுப் பிரச்சினையின் எல்லையைத் தாண்டிவிட்டோம்’, என்று, எக்களிப்புடன் கூறுகிறது. ஆனால், அந்த சர்க்காரின் கீழ் வாழும் மக்களில் பலர், ஒரு கவளம் சோறு கிடைக்காத காரணத்தால் மாண்டு போகிறார்கள்—தற்கொலை செய்துகொள்கிறார்கள்.

தாயை மகன் கொல்லும் நிகழ்ச்சியும், பெற்ற குழந்தையை தந்தை கொல்லும் சரித்திரம் காணாத நிகழ்ச்சியும் இங்கே நடைபெறுகிறது.

ஆட்சியிலே இருக்கும் சர்க்கார், ‘ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பித்துவிட்டோம்’, என்று பேசினார்கள்;—அப்போது, ‘வறுமை தாங்காமல், பிள்ளைகளை விற்கிறார்கள்’, என்று செய்திகள் வெளியாயின!

ஆட்சியில் உள்ள காங்கிரஸ் சர்க்கார், ‘ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையப் போகிறது’, என்று பேசுகிறார்கள்;—இப்போது, ‘பெற்ற பிள்ளையைக் கொலை செய்கிறார்கள்’ என்று செய்திகள் வெளியாகின்றன.

இது, நாடு முன்னேற்றம் அடைந்துவிட்டது என்பதன் அறிகுறியா, நாடு கீழ் நிலைக்குச் செல்கிறது என்ற அறிவிப்பா என்பதை, பொதுமக்கள்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

‘சோறு கிடைக்கவில்லை; ஆகவே, செத்து மடிகிறார்கள்’, என்று செய்திகள் கூறுகின்றன.

‘பசி போகவில்லை; கிடைக்கும் அன்னம் வயிற்றை நிரப்பவில்லை’, என்று பலர் வருந்துகிறார்கள்.

‘பதினோறு மூட்டை அரிசி வடித்தோம்; கிடைத்த அன்னம் போதவில்லையே’, என்று தஞ்சாவூரில் பலர் வருந்துகிறார்களாம்.

பதினோறு மூட்டை அரிசி வடித்தார்களாம்—காந்தி ஜெயந்தியின்போது ஏழைகளுக்கு அன்னமிட அல்ல; பண்டித நேருவின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு பரதேசிகளுக்கு அன்னமிட அல்ல; ‘தஞ்சையிலே கோயில் கொண்டிருக்கும்’ பிரகதீஸ்வரருக்கு அன்னாபிஷேகம் செய்தார்களாம்; அதற்கென்று 11 மூட்டை அரிசி வடிக்கப்பட்டதாம்; பிரகதீஸ்வரருக்கு அன்னாபிஷேகம் செய்ய அமைக்கப்பட்ட குழுவினர், பெருமுயற்சி செய்து இந்தப் புனித காரியத்தைச் செய்தார்களாம்.

“11 மூட்டை அரிசிவடித்து அன்னாபிஷேகம் செய்தும் லிங்கம் மூடப்படவில்லை; இந்த லிங்கத்தின் உயரம் 6 அடி; ஆவுடையார் 54 அடி சுற்றளவுள்ளது; பாணம் 9 அடி உயரமும் 23½ அடி சுற்றளவுள்ளதுமாகும்; 50 மூட்டை அரிசி வடித்தால் அன்னாபிஷேகம் பூர்த்தியாகும் என்று கூறப்படுகிறது” என்று செய்தி ஒன்று கூறுகிறது.

“11 மூட்டை அரிசி வடித்தோமே; பகவானே, உன் உடல் மறையவில்லையே! ‘பாபம்’ ஏதும் செய்துவிட்டோமா?”
என்று பக்தர்கள் பலர் வருந்தியிருப்பார்கள்.

“அய்யனின் பெருமையே பெருமை; பதினோறு மூட்டை அரிசி போதுமா? பகவானின் திருமேனியை மூட 50 மூட்டை வடித்தால், ஒருவேளை அன்னாபிஷேகம் பூர்த்தியாகலாம்,”
என்று, பக்தர்கள் பலர் அபிப்பிராயம் தெரிவித்தார்களாம்.

தென்னாட்டுப் பத்திரிகை ஒன்று இச்செய்தியை வெளியிட்டு இருக்கிறது. கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்—பதினோறு மூட்டை அரிசி வடித்து அன்னாபிஷேகம் செய்த காட்சியை, நாட்டிலே ஒரு கவளம் அன்னம் கிடைக்காமல் வீதியிலே அலையும் ஏழை பார்க்க நேர்ந்தால் என்ன எண்ணுவான்—என்று!

வறுமையின் காரணமாக ஏற்படும் வழக்குகள், நீதிமன்றம் ஏறிக்கொண்டே இருக்கின்றன. ஏழையின் கண்ணீர், நீதிபதிகளின் மனதை இளகச் செய்து, ‘அந்தோ, பரிதாபம்! அவன் தண்டனையைக் குறைக்கலாம்,’ என்று சிபாரிசு செய்கிறார்கள்.

சோறு கிடைக்கவில்லை; பெற்ற பிள்ளை பசியால் துடிக்கிறது; என்ன செய்வதென அறியாது திகைக்கும் பெற்றோரின் நிலை, நாட்டிலே பல இடங்களில் ‘படம்’ பிடித்துக் காட்டப்படுகிறது.

ஆனால், தஞ்சையிலே, பிரகதீஸ்வரருக்கு ‘அன்னாபிஷேகம்’ செய்கிறார்கள்; பதினோறு மூட்டை அரிசி வடித்தும், அய்யனின் திருமேனி மூடப்படவில்லையே என்று வருந்துகிறார்கள்!

தஞ்சைத் தரணியிலே சென்ற ஆண்டு வீசிய புயலால் நாசமாக்கப்பட்ட குடும்பங்களிலே இன்னும் வறுமைப் புயல் வீசிக் கொண்டிருக்கிறது; அவர்கள் வாழ்வில் தென்றல் வீசுவதற்கு, ஆளும் சர்க்கார், போதுமான நிவாரணம் அளிக்கவில்லை; ஆனால், தஞ்சைக் கோவிலில் அன்னாபிஷேகம் நடைபெறுகிறது. நாட்டிற்கு அவசியமான காரியமா, அது?

பண்டித நேரு, சீனா சென்று வந்தார்; அங்கே, நூறு நாட்களில், கோடிக்கணக்கான மக்கள் சேர்ந்து, மஞ்சள் நதியின் போக்கைக் கட்டுப்படுத்திய மகத்தான சாதனை பற்றிப் பேசுகிறார்.

தஞ்சையிலே மகத்தான சாதனை புரிகிறார்கள்—ஐம்பது மூட்டை அரிசி வடித்தால் அன்னாபிஷேகம் பூர்த்தியாகும்—என்று புள்ளிவிவரம் தரப்படுகிறது. ‘நாடு முன்னேறுகிறது; வறுமை நீங்க மார்க்கம் வகுக்கப்படுகிறது,’ என்பதன் அறிகுறியா, இது?

வறுமையில் வாழும் மனிதனுக்கும், வாழ்வுப் பூந்தோட்டத்தில் உலவும் மனிதனுக்கும் இடையேயுள்ள இடைவெளி அதிகமாகிறது. சமூகத்திலே காணப்படக்கூடாத நிலை—வளரக் கூடாத சூழ்நிலை வளர்ந்துகொண்டே இருக்கிறது.

ஏழையைக் கவனிப்பார் இல்லை; அவனைக் கவனிக்க வேண்டிய ஆட்சிபீடமோ, ஆலை முதலாளிகளிடம் நன்கொடைபெற அலைகிறது.

சோறு கிடைக்கவில்லை—ஒருவருக்கு இருவருக்கு அல்ல—பலருக்குக் கிடைக்கவில்லை—நாட்டின் நிலை இது.

அதே நேரத்தில் ஆண்டவனுக்கு அன்னாபிஷேகம் செய்கிறார்கள்.

இந்த நிலை மாறவேண்டாமா? ஏழை வாழ்வு பெற வேண்டாமா?—என்று சிந்திக்க வேண்டுகிறோம்.

தென் ஆப்பிரிக்க புதிய கல்வித் திட்டம்

பாதிரிமார்களின் பலத்த எதிர்ப்பு

தென் ஆப்பிரிக்க யூனியன் சர்க்கார் புதிதாக அமுல் நடத்தும் கல்வித் திட்டத்தை கேப் மாகாண ஆங்கிலிகன் சர்ச்சைச் சேர்ந்த மத குருமார்கள் தங்கள் கூட்டமொன்றில் கண்டித்திருக்கிறார்கள்.

“ஒரு குறிப்பிட்ட இன மக்கள் கூட்டத்தை நிரந்தரமாக அடிமைகளாக வைத்திருக்க உதவும் கொள்கை ஒன்றை கடைப்பிடிப்பது தவறாகும்” என்று குருமார்கள் கண்டித்துள்ளனர்.

‘பாந்து கல்வித் திட்டம்’ என்று அழைக்கப்படும் அத்திட்டத்தின்படி, சர்க்காரே எல்லா கல்வி நிலையங்களையும் ஏற்று நடத்தும்; பள்ளிக் கூடங்களை வாடகைக்கு எடுத்துக் கொண்டு சர்க்கார் தனது புதிய கல்வி முறையை அமுல் செய்யும்.

ஏற்கனவே பல பள்ளிக்கூட கட்டிடங்களை சர்க்காருக்கு வாடகைக்கு விட மறுத்து, பல பாதிரிமார்கள், பள்ளிகளையே மூடிவிட்டனர்.

எல்லா பள்ளிகளையும் மூடிவிட்டால் பல ஆசிரியர்கள் வேலை இழக்க நேரிடும் என்றும், ஆகவே, பள்ளிகளை சர்க்காருக்கு வாடகைக்கு விடுவது என்றும் பாதிரிமார்கள் பலர் முடிவு செய்துள்ளனர்.

“இரண்டு தீமைகள் நம் முன்னே நிற்கின்றன; அவை இரண்டில், எது குறைந்த அளவு தீமை பயப்பதோ அதை ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது,” என்று பாதிரிமார்கள் கூறுகின்றனர்.

“இதனால் புதிய கல்வித் திட்டத்தைத் தாங்கள் ஆதரிப்பதாகப் பொருள் கிடையாது,” என்று அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

ஐரோப்பிய கூட்டுப் பாதுகாப்பு

ரஷ்ய யோசனையை மேற்கத்திய வல்லரசுகள் நிராகரிக்கும்?

இத்திங்கள் 29-ந் தேதியன்று, ஐரோப்பாவின் கூட்டுப் பாதுகாப்புப் பற்றி ஆலோசிப்பதற்காக சோவியத் ரஷ்யா, 23 ஐரோப்பிய நாடுகளையும், அமெரிக்காவையும் கேட்டுக் கொண்டு விடுத்திருந்த அழைப்புக்களை நிராகரித்து விடுமாறு அமெரிக்கா, தனது உறவு நாடுகளைக் கேட்டுக் கொள்ளும்.

ஐரோப்பிய பொதுஜன அபிப்பிராயத்தை குழப்பத்திற்குள்ளாக்கவே, சோவியத் ரஷ்யா இந்த யோசனையைத் தெரிவித்திருப்பதாகவும், இது, ரஷ்யாவின் பிரசாரத் தந்திரமென்றும் அமெரிக்க அயல் நாட்டமைச்சர் டல்லஸ் கருத்தறிவித்திருக்கிறார்.

“மாநாட்டிற்கான பார்வையாளரை அனுப்புமாறு, சோவியத் நாடு, கம்யூனிஸ்டு சீனாவைக் கேட்டுக் கொண்டதிலிருந்தே மாநாடு கூட்டுவதின் முக்கியத்துவம் மிக மிகக் குறைந்து விட்டது,”
என்று, மேலும் அவர் கூறியிருக்கிறார்.

இவ்விஷயத்தில் மேற்கத்திய நாடுகள் பலவும் தங்களுக்குள் ஒரு ஐக்கிய முன்னணியொன்றினை உருவாக்கிக் கொண்டு, தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும்.

ரஷ்யாவின் இந்த அழைப்புப் பற்றிக் கலந்தாலோசிக்க அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் கூடிப் பேசலாமென்றும், எவ்விதத்திலும், ரஷ்யாவின் இவ்வழைப்பை மேற்கத்திய அந்த நாடுகள் நிச்சயமாக நிராகரித்துவிடும் என்பதும் உறுதியாகத் தெரிகிறது.

போலீஸ் தாக்குதல்—நால்வர் கொலை

முஸ்லிம் சகோதரத்துவக் கழகக் கிளை ஒன்றின் மீது போலீசார் தாக்குதல் நடத்தியதின் விளைவாக நால்வர் கொல்லப்பட்டனர் என்றும் இன்னுமொருவர் படுகாயப்பட்டார் எனவும் சொல்லப்படுகிறது.

கழகக் கிளை இயங்கிக் கொண்டிருந்ததாகக் கூறப்பட்ட ஒரு மாளிகையினுள் போலீசார் புகுந்தனர். உடனே மாடிப் படிக்கட்டுகளில் குண்டுகள் வெடிக்கப்பட்டன; போலீசார் தீயணைக்கும் எஞ்சினை வரவழைத்து, அதிலிருந்த ஏணி மூலம், நான்காவது மாடியை அடைந்தனர். அப்பொழுது அவர்கள் மீது கை வெடிக் குண்டுகள் வீசப்பட்டன. உடனே போலீசார் தங்களிடமிருந்த ‘ரிவால்வர்’ கொண்டு சுட ஆரம்பித்தனர். விளைவு, ரயில்வே தொழிலாளர்கள் இருவரும், ஒரு மாணவரும் அருகிருந்த இன்னொருவரும் ஆக நால்வர் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகினர். இவர்கள் மூவரும் அந்த இயக்கத்தின் ரகசியக் கிளை உறுப்பினர்கள் என்று சொல்லப்படுகிறது.

சொந்த வீடு கட்டிக்கொள்ள..

ரூ. 8000 வரை அரசாங்கம் கடன் தரும்

குறைந்த வருமானமுள்ளவர்களும் தங்களுக்குச் சொந்தமாக வீடு கட்டிக்கொள்ள கடன் உதவி செய்யும் ஒரு திட்டத்தை மத்திய சர்க்கார் அங்கீகரித்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தக் கடன் உதவித் திட்டப்படி, மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களுக்கு 4½ சதவிகித வட்டி வீதம் கடன் உதவி, அத்தொகையை 30 தவணைகளில் மீண்டும் பெற்றுக்கொள்ளும்.

மாநில சர்க்கார்களுக்கு அளிக்கப்படும் இப்பணத்தை, அவைகள், தனிப்பட்டவர்களுக்கும் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், குடியிருப்பு வசதி நிதிக் கார்ப்பொரேஷன்களுக்கும், தக்க ஜாமீன் பேரில் வினியோகிக்கும்.

வீடு கட்டப்படுகிற நிலத்தின் விலை உட்பட ரூ. 8000 செலவில். 80 சதவிகிதத்துக்கு மேல் போகாமல் உதவியளிக்கப்படும். இதிலிருந்து, இத்திட்டத்தின் கீழ் உதவி பெற மனுச் செய்துகொள்பவர்கள், மொத்தச் செலவில் 20 சதவிகிதத் தொகையைத் தாங்களே திரட்டிக்கொள்ள வேண்டும் என்று தெரிகிறது.

திட்டப்படி ரூ 10,000-க்கு மேற்படாமலேயே வீடுகள் கட்டப்பட வேண்டும். என்றாலும், அதற்கும் மேற்பட்ட செலவில் வீடு கட்டிக்கொள்ள ஆட்சேபனை ஏதும் கிடையாதானாலும், அவர்களுக்கு ரூ. 8000-க்கு மேல் கடன் உதவி கிடையாது.

இத்திட்டம், சொந்த வீடற்றவர்களுக்கு உதவவே இருந்தாலும், சில சில சந்தர்ப்பங்களில் விதிவிலக்களிக்கப்படலாமாம்!

ஆண்டொன்றுக்கு ரூ. 6000க்கு மேல் சம்பாதிப்பவர்கள் இத்திட்டத்தின் கீழ் உதவி பெற முடியாது; மேலும், கட்டப்படும் வீட்டின் அடித்தளப் பரப்பு 330 சதுர அடிகளிலிருந்து 1,200 சதுர அடிகள் வரை இருக்கலாம்.

டூனீஷியாவில்...

மத்திய டூனீஷியாவிலுள்ள சிரியானோ பிரதேசத்தில், பிரெஞ்சு இராணுவத்தினருக்கும், ‘கலகக் கூட்டம்’ ஒன்றுக்குமிடையே ஏற்பட்ட மோதுதல் ஒன்றின் விளைவாக 18 கலகக்காரர்கள் கொல்லப்பட்டதாகவும் 30 பேர் காயம்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

பிரெஞ்சு இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டாராம். கலகக் கூட்டத் தலைவர்களில் ஒருவரும், மற்றும் 50 பேரும் பிடிக்கப்பட்டுள்ளனராம்.

வற்புறுத்தியுள்ளனர்!

பெரியாறு அணைத் திட்டம் ஆரம்பமாவதை ஒட்டி, கூடலூர் - தேனி இரயில் பாதையும், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் ஆரம்பிக்கப்படவிருக்கும் காரணத்தால் நெய்வேலி - விருத்தாசலம் இரயில் பாதையும் உடனடியாகப் போடப்பட வேண்டுமென்று சென்னை சர்க்கார், மத்திய சர்க்காரை வற்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

பட்டத்தின் அடக்குமுறை கொடுமை

இட்லரின் கொடுமையையும் மிஞ்சியது

மக்கள் சபை உறுப்பினர் வி. பி. நாயர் கண்டனம்

சுசீந்திரம், நவ. 13—

"கடந்த ஆகஸ்ட் 11-ந் தேதி திரு—தமிழக விடுதலை தினத்தன்றும் அதைத் தொடர்ந்தும் நடந்தது போன்ற கோரமான அடக்குமுறை உலகில் எங்குமே நடைபெற்றதில்லை; இட்லரின் 'கான்சென்ட் ரேடின்' முகாமில்கூட இத்தகைய கோரமான அடக்குமுறைகள் நடைபெற்றிருக்க மாட்டாது.

"ஆக. 11-ந் தேதி துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானவர்களின் சர்ரத்தைக்கூட திரு—த. நா. காங்கிரசாரைக் கொண்டு தின்னும்படி அடித்துத் துன்புறுத்தியிருக்கின்றனர் போலீசார்;

'தண்டனை அடைந்தவர்களைக்கூட போலீசார், 'லாக்கப்'புகளில் தாக்கியிருக்கின்றனர்.

"திரு—பட்டம் தாணுவை எனது தந்தையாரே படிக்க வைத்தார்; ஆனால், என் தந்தை, திரு. பட்டத்திற்கு, மரியாதையைக் கற்றுத்தர மறந்துவிட்டார்."

—இவ்வாறு, மக்கள் சபை உறுப்பினரான தோழர் வி. பி. நாயர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தோழர் பெருமாள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திரு. நாயர், பட்டத்தின் அடக்குமுறையை மேற்கண்டவாறு கண்டித்தது மட்டுமின்றி, இப்போது நடைபெறுகிற துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி விசாரணை செய்வது, பகிரங்க விசாரணைக் குழு அல்லவென்றும், இந்த விசாரணைக் குழுவை வாபஸ் வாங்கிக்கொண்டு, பட்டம் சர்க்கார் நேர்மையுடன் வேறு ஒரு பகிரங்க விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டுமெனவும் கோரினர்.

அகதிகள் வசிக்கும் நகரம்

'கார்ப்பரேஷனா'க மாற்றப்படுகிறது

அகதிகள் தங்கிக் கொண்டிருக்கிற நகர்ப் புறமான பாரிதாபாத் ஒரு தனி 'கார்ப்பரேஷ'னாக ஆக்கப்படுவதுபற்றி மசோதா ஒன்று வருகிற மக்கள் சபைக் கூட்டத்தில் கொண்டு வரப்பட இருக்கிறதாம்.

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள நகரமாகும் பாரிதாபாத்; ஆனால், அதன் நிர்வாகத்தை இப்போது மத்திய அரசாங்கத்தினர் கவனித்து வருகின்றனர்.

இப்போது அதை தனி 'கார்ப்பரேஷ'னாக மாற்றுவதினால், அந்த நகரம் அபிவிருத்தி அடைவது துரிதமாகலாம் என நம்பப்படுகிறதாம்.

அந்த நகரத்தில் இப்போது பெரும்பான்மையினராக வசிப்பவர்கள் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்திலிருந்து ஓடிவந்த அகதிகளாகும்.

இந்தியத் தொழில்களுக்கு

ஜப்பான் உதவி

பொருள் உதவியும், நிபுணர்கள் உதவியும் கிடைக்கும்

இந்தியாவின் கனரகத் தொழில்களின் அபிவிருத்திக்கு ஜப்பானிடமிருந்து சிறந்த முறையில் உதவி கிடைக்குமென்று தெரிகிறது.

பல தொழில்கள், இந்தியா—ஜப்பான் ஆகிய நாடுகளின் கூட்டு முயற்சியினால் ஆரம்பிக்கப்படலாம் என்று ஜப்பான் ஏற்றுமதி—இறக்குமதி பாங்கியின் டைரக்டர் கூறியுள்ளார்.

இதுபோன்ற முயற்சிகளுக்கு ஜப்பான் சர்க்காரிடமிருந்து பொருளாதார உதவியும், தொழில் நுணுக்க உதவியும் கிடைக்குமென்றும் அவர் குறிப்பாகத் தெரிவித்தார்.

ஜப்பானின் ஏற்றுமதி இறக்குமதி பாங்கி என்பது, சர்க்காரின் ஏஜென்சி நிலையம் என்றும், ஜப்பானிய தொழில்களுக்கும், வெளிநாட்டுத் தொழில்களுக்கும் பொருளாதார உதவி செய்யும் நோக்கத்துடன் நான்கு ஆண்களுக்கு முன்னர் அது ஆரம்பிக்கப்பட்டதென்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் 120 ரயில் என்ஜின்களை இந்தியாவுக்குத் தயாரிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டதாம். இதன் மதிப்பு 12 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ. 570 லட்சம்) என்று தெரிகிறது.

மைசூரில் சர்க்காரின் மின்சார பொருள்கள் உற்பத்தித் தொழிற்சாலை இரண்டில் ஜப்பானின் உதவியுடன் நடைபெறுகிறதாம்.

சேலத்தில் ஜப்பானிய நிபுணர்களின் உதவியுடன் 'மக்னீசியா கிளிங்கர்' தொழிற்சாலை ஒன்று முழு அளவில் வேலை செய்கிறது என்று அவர் மேலும் கூறினார்.

பெரியாறு மின்சாரத் திட்டம்

சென்னை, திரு—கொச்சி சர்க்கார்களுக்கிடையே, சென்னை மாநிலத்தில் ஒரு மின்சாரத் திட்டத்திற்காகப் பெரியாறு தண்ணீரை உபயோகப்படுத்துவது சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவும், அத்திட்டத்தை அமுல் செய்வதற்கான வேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

இந்தப் பெரியாறு தண்ணீர்த் திட்டம் சுமார் ரூ. 10 கோடிசெலவில் தயாரிக்கப்பட்டு முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்கப்பட்டுள்ளது; ஆனால், மேற்கண்ட இரு சர்க்கார்களுக்குமிடையே ஏற்பட்ட சில தகராறுகளின் காரணமாக அது மேற்கொள்ளப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டது; தற்போது ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் காரணமாக, இனி, அது விரைவிலேயே மேற்கொள்ளப்படும்.

தேர்தலில் நிகழ்ந்த தவறுகள்!

பெப்சு மாநில அதிகாரிகள்மீது குற்றச்சாட்டு

தேர்தல் கமிஷன் கண்டுபிடிப்பு

"பெப்சு மாநிலத்தில் கடந்த பொதுத் தேர்தலின்போது, பல தேர்தல் அதிகாரிகள், தேர்தல் விதி முறைகளைக் கடைபிடிக்கத் தவறிவிட்டார்கள்," என்று, தேர்தல் கமிஷன், அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

"தேர்தல் அதிகாரிகளாகச் சென்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குப் போதுமான பயிற்சி அளிக்கப்பட்டிருந்தும், அவர்கள் தவறியிருக்கின்றனர்," என தேர்தல் கமிஷன் தெரிவிக்கிறது.

"சர்க்கார் ஊழியர்களின் மிகுந்த கவனக் குறைவாலும் தவறுகள் நிகழ்ந்திருக்கின்றன; முதல் பொதுத் தேர்தல் நடைபெற்று $2\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகியும், அவர்கள் எவ்வித முன்னேற்றமும் கொள்ளவில்லை.

"தேர்தல் அதிகாரிகளாகச் சென்றவர்களில் பலர் ஓட்டுப் பெட்டிகளை மூடி 'சீல்' வைப்பதில் சரியான கவனம் செலுத்தவில்லை; பல பெட்டிகளைச் சரியாக மூடி, 'சீல்' வைக்கத் தவறிவிட்டிருக்கின்றனர்; ஒரு இரட்டை உறுப்பினர் தொகுதியில் வாக்குப் பதிவு சரியாக நடைபெறவில்லை. அதற்கான ஏற்பாடுகளை அந்த வட்ட தேர்தல் அதிகாரி சரிவரச் செய்யவில்லை;

"பல தேர்தல் அதிகாரிகள், தங்கள் 'நாட் குறிப்பில்' தேர்தல் பற்றிய முழு விபரங்களைக் குறிக்கவில்லை; பல அதிகாரிகள், தங்கள் வாக்குகளைப் பதிவு செய்த ஆண்; பெண் வாக்காளரின் தொகைகளை சர்க்காருக்கு அறிவிக்கவில்லை.

"எனவே, அரசாங்கம் தேர்தல் அதிகாரிகளாகப் பணி புரியும் சர்க்கார் ஊழியர்கள் 'வாக்குச் சீட்டுக் கணக்குகளை சரியாக வைத்துக் கொள்ளாமலிருப்பதும்; தேர்தல் விதிகளை கடைப்பிடிக்கத் தவறுவதும், கடமையிலிருந்து தவறுவனவாகக் கொள்ளப்பட்டு, தண்டனை தரப்படும்,' என எச்சரிக்க வேண்டும்," என்றும் தேர்தல் குழு சர்க்காருக்குத் தெரிவித்துள்ளது.

அதன் பேரில், சர்க்காரும் எல்லா இலாக்காவினருக்கும் தேர்தல் கமிஷனின் குறிப்பை அனுப்பி, எச்சரித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இலஞ்சக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ம. பி. முதலமைச்சர்!

நாகபுரிநகர் காங்கிரஸ் நம்பிக்கை தீர்மானம் நிறைவேற்றுகிறது

நாகபுரி நகர காங்கிரஸ் கமிட்டி, மத்தியப் பிரதேச முதன் மந்திரி பண்டித சுக்லா மீது முழு நம்பிக்கை தெரிவித்து, அவரே தொடர்ந்து மாநில நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

இத் தீர்மானம் வித்தல்தாஸ் ஹெடா என்பவரின் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் பேசியவர்கள், 'பி.-சோ. கட்சியினர் முதன்மந்திரி மீது சாட்டியுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை, அனுவசியமானவை; சோஷலிஸ்டுகள், இப்போது நம்பிக்கை துரோகம் இழைத்து, குற்றம் சாட்டப்பட்டுள்ள சிலருடன் ஒன்றுகூடியுள்ளனர்; அந்தச் சேர்க்கை கண்டிக்கத்தக்கதாகும்," என்று குறிப்பிட்டனர்.

சுமார் 2000 பேர் கூடியிருந்த கூட்டத்தில் தீர்மானத்தை தலைவர் ஓட்டுக்கு விட்டபோது சுமார் 50 பேர், தாங்கள் தீர்மானத்தை எதிர்ப்பதாகக் குரல் கொடுத்தனர். அந்த எதிர்ப்புக் குரலைப் பொருட்படுத்தாமலேயே, தலைவர், தீர்மானம் நிறைவேறியதாக அறிவித்தார்.

[ம. பி. முதன் மந்திரி பண்டித சுக்லா மீது இலஞ்சம் முதலிய குற்றச்சாட்டுக்களை பி. சோ. கட்சியினர் சுமத்தியிருப்பது பற்றிய செய்தி விவரங்கள் ஏற்கெனவே நமது இதழில் வெளிவந்துள்ளதை தோழர்கள் அறிவார்கள்]

நீதிமன்றத்தில் அறப்போர்

கே. எல். பி. கட்சியினருக்குத் தண்டனை

ஓங்கோல் தாலூகா கே. எல். பி கட்சியின் கூட்டுச் செயலாளர் கோலபதி வீராசாமி, பெனிகா-வெங்கடசுப்பையா, நவாஜல ராமசுப்பையா ஆகியோருக்கு ஓங்கோல் சப்-மாஜிஸ்திரேட் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்புக் கூறினர்.

இவர்கள் சபார்டினேட் ஜட்ஜின் நீதிமன்றத்தில் நுழைந்து, ஆந்திராவில் மதுவிலக்கு பற்றிய ராமமூர்த்திக் குழுவின் சிபார்சுகளை அமுல் செய்யும்வரையில் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு கோரி அறப்போர் நடத்தினர்கள் என்று தெரிகிறது.

கழகச் செய்திகள்

சேலம் கருங்கல்பட்டி தி. மு. கழகக் கிளை

4—11—54 மாலை 7 மணியளவில் கழக மனையில், தோழர் ப. பத்மநாபன் தலைமையில் 30-வது வார்டு தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது இந்தியா - சீனா வர்த்தக ஒப்பந்தத்தை வரவேற்றும், ஆனால் சீனாவிலிருந்து ஜவுளி இறக்குமதி செய்ய டில்லி சர்க்கார் ஒப்பந்தம் செய்திருப்பதால், இந்த நாட்டு ஜவுளித் தொழில் பாதிக்கப்படுமாதலால் ஜவுளி இறக்குமதியை நிறுத்த வேண்டுமென்றும், எல்லா அந்நிய நாட்டுத் துணிகளையும் இறக்குமதி செய்வதைத் தடை செய்ய வேண்டுமென்று டில்லி சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், மில் துணி செஸ் வரி மூலம் கிடைக்கும் நிதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் மிகவும் குறைந்த அளவில் நெசவாளர்கள் சேர்க்க அனுமதிக்கப்பட்டிருக்கிறதென்றாலும், குறைந்தபட்சம் ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்திலும் 500 நெசவாளர்களையாவது சேர்த்துக் கொள்ள ஆவன செய்ய வேண்டுமென சென்னை சர்க்காரை கேட்டுக் கொண்டும், சேலம் நகர ஆட்சி மன்றத்தில் ஏற்கனவே செய்யப்பட்ட தீர்மானத்தின்படி சேலம் 30-வது வார்டில் ஒரு படிப்பகம் நிறுவ வேண்டுமாய், சேலம் நகர ஆட்சி மன்றத்தை கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னாள் செயலாளர் கே. வி. கோபால் அவர்களிடமிருந்து வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு அங்கீகரித்து புதிய செயற்குழு ஏற்றுக்கொண்டது.

பனங்குளம் தி. மு. கழகம்

10—11—54ல், தோழர் எம். எம். இரத்தினம் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: ம ரா. மணிமொழி; துணைச்செயலாளர்: வெ. அ. மாணிக்கவாசகம்; பொருளாளர்: எம். ஆர். கே. சேகர்; மாவட்டப் பிரதிநிதி: ம. சொ. சிவகுருநாதன்; செயற்குழு உறுப்பினர்கள்: கே. எம். கருப்பையா, எஸ். வி. சதானந்தம், எம். ஏ. மணி, சண்முகசுந்தரம், பெ. ரி. வடிவேல், எம். எம். இரத்தினம்.

புதுவலசை தி. மு. கழகம்

31—10—54 மாலை 4 மணிக்கு தோழர் மு. அ. தல்ஹான் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் தோழர் க. அப்துல் வகாபு விலகல் ஒப்புக்கொள்ளப்பட்டு, புதிய செயற்குழு உறுப்பினராக தோழர் மு. ரெத்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டார். வெளி நாடுகளுக்குச் செல்லும் தோழர்களான க. அப்துல் வகாபு, க. க. அப்துல் முத்தலீபு, மு. முகமது, முஸ்தபா ஆகியோருக்கு தி. மு. க. சார்பில் பிரிவுரை பாராட்டலும், அவர்களின் நற்பணிக்கு நன்றியும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

உடுமலை தி. மு. கழகம்

5—11—54 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு உடுமலைத் தோழர் இரா. கனகன் தலைமையில் மதுரை எஸ். முத்து கல்லக்குடி போராட்டம் குறித்தும், மாற்றுக் கட்சியினர் போக்குக் குறித்தும் பேசினர். பின்னர் தோழர் கே. ஏ. மதியழகின் தலைமையில் புதுமை மன்றத்தினரின் "வாழ்க்கை வாழ்வதற்கே" எனும் சமூக சீர்திருத்த நாடகம் நடைபெற்றபின் செயலாளர் வெ. காளியப்பன் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

மகாதேவி (முசிறி) தி. மு. கழக அமைப்பு

31—10—54 இரவு 8 மணிக்கு இவ்வூரில், தோழர் டி. கே. கும்பையா தலைமையில் நடைபெற்ற தி. மு. கழக அமைப்புக் கூட்டத்தில், கழகத் துவக்க விழாவை இம்மாத இறுதிக்குள் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டபின், செயற் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: இரா. சுப்ரமணியன்; துணைச் செயலாளர்: ம. இரா. கா. வேலன்; பொருளாளர்: செ. துரைசாமி; மாவட்டப் பிரதிநிதி: ம. க. நவநாதன்; விளம்பர உறுப்பினர்: இரா. பெருமாள். முடிவில் திருச்சி பீடித் தொழிற் சங்கத் தலைவர் ஏ. எம். செரீப் கழகக் கொடியை ஏற்றுவித்து, கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

முல்லைவாடி தி. மு. கழகத் துவக்க விழா

ஆத்தூர் வட்ட முல்லைவாடி தி. மு. கழகத் துவக்க விழா 6-11-54 மாலை 5 மணிக்கு நடைபெற்றது. தோழர் எம். பி. சுப்ரமணியம், எம். எல். ஏ., தலைமை தாங்கினர். தோழர் எம். குப்புசாமி கொடியேற்று விழாவாற்றினர். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கழகத்தைத் துவக்கி வைத்து சொற்பொழிவாற்றினர். சிறுர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கடலூரில் (ஓ. டி.) தி. மு. க. பொதுக்கூட்டம்

7—11—54 மாலை 6 மணிக்கு, செல்வம் திடலில், தோழர் கே. ஜி. சாமிநாதன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் சிற்றுளி சுப்பிரமணியம், இரெ. இளம்வழுதி, ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. ஆகியோர், நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவரின் தான்தோன்றித்தனத்தையும், மாவட்டக் கழகத் தேர்தலில் நடைபெற்ற தில்லுமுல்லுகளையும் விளக்கிப் பேசினர்

இலங்கை தி. மு. க. தலைமை நிலையம்

25—10—54 மாலை 5 மணிக்கு, இலங்கை தி. மு. கழக தலைமை நிலையச் சார்பில், கொழும்பு நாராயண குரு மண்டபத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு தேனீர் விருந்தளிக்கப்பட்டது.

பின்னர் தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் இ. தி. மு. க. நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தை இ. தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. அதிமணி துவக்கிவைத்தார். நிர்வாகிகள் கடைப்பிடிக்க வேண்டிய முறை பற்றி தோழர் நெடுஞ்செழியன் அறிவுரை பகன்றார்.

நாகூர் தி. மு. கழகம்

10—11—54 இரவு 9 மணிக்கு தோழர் எஸ். வி. சபாபதி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக்கூட்டத்தில் துணைச் செயலாளர் எஸ். எம். எஸ். நாதன் அவர்களை கழகத்தினின்று நீக்கியும், இம்மாத இறுதிக்குள் கழக வாசகசாலையொன்று ஆரம்பிப்பது என்றும், விரைவில் இவ்வூரில் கழகச் சார்பாக ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும், செயற்குழுவிலுள்ள 4 காலி இடங்களுக்குத் தோழர்கள் ஆ. அடைக்கலசாமி, ஜி. சுபஹான், என். எஸ். ராமதாசன், எஸ். நசீர் ஆகிய நால்வர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும், தோழர் எஸ். நசீரை துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்க முடிவு செய்ததுடன், அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆந்திர சட்டசபை கலைக்கப்பட்டது

நான்கு மாதங்களில் மீண்டும் பொதுத்தேர்தல்

ஆந்திர மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத்தின் நேரடி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவரின் பிரதிநிதியாக, ஆந்திர மாநில கவர்னர் சி. எம். திருவேதி நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார்.

பத்து நாட்களுக்கு முன், திரு பிரகாசம் தலைமையில் இயங்கி வந்த மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும், சட்டசபையில் அதைத் தொடர்ந்து பிரகாசம் மந்திரிசபை ராஜினமாவைச் சமர்ப்பித்ததும், ராஜினமாவை ஏற்றுக்கொள்ள கவர்னர் அவகாசம் கோரியிருந்ததும் நினைவிலிருக்கலாம்.

அகமதாபாத் நகரில் முகாம் செய்திருக்கும் குடியரசுத் தலைவர் ராஜேந்திரர், தனது நேரடி ஆட்சிக்கான பிரகடனத்தில் இன்று காலை கையொப்பமிட்ட செய்தி, காலையே கவர்னருக்கு தெரிந்ததும் கவர்னர், பிரகாசம் மந்திரிசபையின் ராஜினமாவை அங்கீகரித்துக்கொண்டு, நிர்வாகப் பொறுப்பை தாம் ஏற்றுக்கொள்ளுவதாக அறிக்கை விடுத்தார்.

மேலும், குடியரசுதலைவர், ஆந்திர சட்டசபை கலைக்கப்படுவதுடன் மறு பொதுத் தேர்தல் கூடிய விரைவில் நடத்தப்பட வேண்டும் என்றும் தமது பிரகடனத்தில் வெளியிட்டுள்ளார்.

அதைப் பின்பற்றி கவர்னர் திருவேதி, பத்திரிகை நிருபர்களிடையே பேசுகையில், வருகிற 1955 பிப்ரவரி 18-ந் தேதி முதல் தேர்தல் துவங்கி மார்ச் 5-ந் தேதி வரை நடைபெற்று முடியலாமெனவும், தேர்தல் முடிவுகள் மார்ச் 15-ல் அறிவிக்கப்பட்டு, ஏப்ரல் முதல் தேதியை அடுத்து புது மந்திரி சபை அமைக்கப்படக் கூடும் எனவும் குறிப்பிட்டிருக்கிருர்.

அதுவரை இடைக்காலத்தில் இருப்பது நான்கு மாதங்களே ஆகையால், அந்தக் குறுகிய கால நிர்வாகத்தை, தாம் மட்டுமே வைத்துக் கொள்ளப் போவதாயும், அதிகாரப்பற்றுடைய அல்லது அதிகாரப்பற்றற்ற ஆலோசகர்கள் யாரையும் தாம் வைத்துக் கொள்ளப் போவதில்லை யென்றும் தெரிவித்திருக்கிருர்.

"தென்னாட்டில் உள்ள அதிகாரிகள் எல்லோரும், திறமை மிகுந்தவர்கள்; நல்லவர்கள்; மனச்சாட்சிக்கு விரோதமின்றி பணி புரிபவர்கள்; ஆனல், இந்த நவீன காலத்தில் அனுமதிக்க முடியாத அளவு பணியாற்றுவதில் காலந்தாழ்த்துபவர்கள்; அப்படி காலந்தாழ்த்தாது மட்டும் அவர்கள் பணி புரிய வேண்டும்."

என்றும் கவர்னர் எடுத்துக் கூறியிருக்கிருர்.

1951-ம் வருடம் மத்தியில் பஞ்சாப் மாநிலத்தில் நெருக்கடி தோன்றிய போதும் திரிவேதியே அங்கு கவர்னராயிருந்து, நிர்வாகப் பொறுப்பை மேற்கொண்டிருந்தார். அதுபற்றி இப்போது அவர் குறிப்பிடுகையில், "பஞ்சாபில் இங்கு தேவைப்படுவதைக் காட்டிலும் அதிக நாட்கள்தான் நிர்வாகப் பொறுப்பேற்க வேண்டியிருந்தது. அப்போது கூட எவ்வித ஆலோசகர்களின் உதவியையும் நாடாத நான், இங்கு—அதுவும் நான்கு மாதங்களுக்கு மட்டும் நான் என் ஆலோசகர்களின் துணையை நாட வேண்டும்?" என்றும் தெரிவித்தார்.

மேலும், தன்முன் இப்போதுள்ள பிரச்னைகளில் தலையாயது, தேர்தல் சரிவர நடைபெற வேண்டுமென்பதாகும். தேர்தல் நேர்மையுடன், சிறப்புற நடைபெற தான் பாடுபடுவதாகவும் அவர் கூறினர்.

இடைக்காலத்தில், ஏற்கனவே முதல் 5 ஆண்டுத் திட்டத்தின் கீழ் உள்ள நந்திகொண்டா, துங்கபத்திரா அணைக்கட்டு, கால்வாய், வம்சாத்ரா திட்டம் இவற்றை மத்திய அரசாங்கத்தின் ஆலோசனையுடன் நிறைவேற்ற தன்னுலானதை யெல்லாம் செய்வதாகவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆந்திர மாநிலத்தின் பகுதிகள் பற்றி, கிராமம், வட்டம், மாவட்டம் வாரியாக திட்டம் சேகரித்து முடிக்கவேண்டிய வேலையையும் தாம் மேற்கொள்வதாக கவர்னர் கூறியிருக்கிருர்.

பிரகாசம் மந்திரிசபை ஓராண்டு கூட முழுவதுமாக ஆட்சியிலிருக்கவில்லை. இப்படித்தான், ஆந்திராவும் சேர்ந்த சென்னை மாநிலத்தில் 1947-ல் அமைந்திருந்த மந்திரிசபையின் தலைவராக திரு. பிரகாசம் இருந்து, ஒரு ஆண்டுகூட முழுவதுமாக முதன் மந்திரியாயில்லாது, காங்கிரஸ் கட்சியினரால் பதவி பறிக்கப்பட்டு, வருந்தி நின்ருர், திரு. பிரகாசம்.

ஆந்திர முதல்வராக இருந்த பிரகாசம் இருமுறை சபையின் தீர்மானங்களுக்குக் கட்டுப்பட மறுத்து விட்டிருக்கிருர்.

ஒருமுறை, விசாகப்பட்டணத்திற்கு ஆந்திரத் தலைநகர், கர்னூலை விட்டு மாற்றப்பட வேண்டும் என்று சட்டசபை தீர்மானித்தது; அதை, மந்திரி சபை ஏற்றுக்கொள்ளவில்லை. பின், மதுவிலக்கு பற்றி ராமமூர்த்தி கமிட்டியின் சிபாரிசுகளை அமுல் செய்ய வேண்டுமென சட்டசபை தீர்மானித்தது; அதையும் பிரகாசம் மந்திரிசபை ஏற்றுக்கொள்ளவில்லை.

அதன் பிறகுதான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கடந்த நவம்பர் 6-ந் தேதியன்று நிறைவேற்றப்பட்டது.

இப்போது நிர்வாகப் பொறுப்பேற்றிருக்கிற கவர்னர் திருவேதி ஐ. சி. எஸ். அதிகாரி. 30 வருட அனுபவம் வாய்ந்தவர்.

ஒரிசா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களின் கவர்னராகப் பணியாற்றியிருக்கிருர்.

பாகிஸ்தான் பிரிவினையின் போது எல்லையோர மாநிலமாயிருந்த பஞ்சாப் மாநிலத்தில் கவர்னராகவும், நிர்வாக அதிகாரியாகவுமிருந்து பணியாற்றிச் சிறப்புப் பெற்றவர்.

இப்போது ஆந்திர கவர்னராயிருந்து நிர்வாகப் பொறுப்பேற்றிருக்கிருர்.

அவரது நிர்வாகத்தின் கீழ் ஆந்திர மக்கள், அமைதியாக தேர்தல் நடைபெற்று நல்லதொரு மந்திரிசபை அமைய வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்.

ஆந்திராவில் 'மது'வின் நிலை

மருத்துவர்களின் அத்தாட்சிப் பத்திரங்களில்லாமலேயே பிறநாட்டுச் சாராயங்களுக்கு 'பர்மிட்டு'கள் வழங்கலாமென்று மதுவிலக்குத் திட்டத்தைத் திருத்த ஆந்திர மந்திரி சபையின் கடைசிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இம்முடிவு மக்களிடையே பெரும் ஆச்சரியங்களை உருவாக்கி விட்டிருக்கிறது.

இந்தச் சட்டத் திருத்தம் மூலம், ராமமூர்த்திக் குழுவின் சில முக்கிய சிபாரிசுகளை சர்க்கார் ஏற்றுக்கொண்டு விட்டதாகத் தெரிகிறது. ஆயினும் இந்த முடிவுகள் பற்றிய அதிகார பூர்வமான தகவல்கள் எதும் கிடைக்கப் பெறவில்லை.

சிலர், சர்க்காருக்கு மதுவிலக்குச் சட்டத்தின் விதிகளைத் திருத்த அதிகாரம் உண்டென்று கருதுகின்றனர். சில உயர்தர அதிகாரிகளும், அம்முடிவை அமுல் செய்ய சட்டம் திருத்தப்பட வேண்டுவது அவசியமென்று கருதுகின்றனர். ஆனல் பார்வையாளர்கள், ஜனதிபதியின் உத்திரவிற்கேற்ப, இனி, கவர்னர்தான் இந்த சட்டப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது.

கழகத் தோழர்கட்கு

"எனது உடல் நிலை இன்னும் குணமடையாததால், இதுவரை ஒப்புக்கொண்ட கூட்டங்களுக்கு மட்டுமே என்னல் வர முடியும்," என்று, தோழர் மீ. சு. இளமுருகு - பொற்செல்வி அறிவிக்கிருர்.

* * *

இளமுருகு—பொற்செல்வி

சுற்றுப் பயண நிகழ்ச்சிகள்

நவம்பர்	20	சிவகாசி
,,	21	சாத்தான்குளம்
,,	27	மணப்பாறை

கழகக் கொடி களவு

இராசபாளையம் நகர தி. மு. க. கிளை சமதர்ம படிப்பகத்தின் சார்பாக, அம்பலப்புளி தெருவில், 11—11—54ல், ஏற்றிவைக்கப்பட்ட கழகக் கொடியை, யாரோ சிலர் திருடிச் சென்றுவிட்டிருக்கின்றனர். கிளைக் கழகச் செயலாளர், இச்சம்பவம் பற்றிப் போலீசில் புகார் செய்திருக்கிருர்.

தென் கன்னட மாவட்ட கழகத் தேர்தல் விபரம்

தென் கன்னட மாவட்டக் கழகத் தேர்தலில், 40 இடங்களில் 31 இடங்களை காங்கிரஸ்காரர்கள் பிடித்துள்ளனர்.

கடந்த பொதுத் தேர்தலில் அம்மாவட்டத்தில் உள்ள இரண்டு மக்கள் சபைத் தொகுதி, 9 சட்ட சபைத் தொகுதி இவற்றில் காங்கிரஸ் வெற்றி பெற்றது; இரண்டு சட்ட சமைத் தொகுதியில்தான் தோற்றது.

பொதுத் தேர்தலுக்குப் பின் காங்கிரஸ், உடுப்பி, மங்களூர் இரண்டு இடங்களிலும் பெரும்பான்மை இடங்களை நகர சபைத் தேர்தலில் இழந்தது. இத் தேர்தலிலும் அந்த நிலை அங்கு நிலவுகிறது.

மாவட்டக் கழகத் தேர்தலில் போட்டியிருந்த 29 தொகுதிகளில் உள்ள 7,98,876 வாக்காளர்களில், 3,70,000 பேர்களே வாக்களித்தனர். அதாவது 46 சதவிகிதம்.

மொத்தம் பதிவான வாக்குகளில் சுமார் 6½ சதவிகிதம் அதாவது 25,000 வாக்குகள் செல்லாதவையாகும்.

மங்களூரில் பதிவான 11,216 வாக்குகளில் 283 செல்லாதவையும், கோடேகர் பகுதியில் பதிவான 11,568 வாக்குகளில் 390 வாக்குகள் செல்லாதவையாயும் இருந்தன.

29 வட்டங்களில் உள்ள 36 இடங்களுக்குப் போட்டியிருந்தது. தாங்கள் போட்டியிட்ட 33 இடங்களில் 28 இடங்களை காங்கிரசார் பிடித்தனர்.

தென் பெண்ணையில் பாலம்

சென்னை மாநிலத்தில், விழுப்புரம் அருகேயுள்ள தென் பெண்ணை ஆற்றின் மேல் ஒரு போக்குவரத்துச் சாலைப் பாலம் கட்டப்படுமெனவும், அதற்காக, மத்திய சர்க்கார் ரூ. 33,32,000 அனுமதியளித்துள்ளதெனவும் கூறப்படுகிறது.

தற்போது, அந்த ஆற்றின் படுகையில் ஒரு சிறிய கல் பாலம் (தாம்போதி) இருந்தாலும், மழை காலங்களில், அது பிரயோசனப்படாமல் போக்குவரத்து தடைபட்டுவிடுகிறது.

கட்டப்படவிருக்கிற பாலத்தின் நீளம் 2000 அடியாகவும், அகலம் 22 அடியாகவும் இருக்குமென்றும், இன்னும் மூன்ருண்டுகளுக்குள் அது கட்டி முடிக்கப்பட்டுவிடுமெனவும் கூறப்படுகிறது.

கட்சியின் அடிப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நகர பி.–சோ. கட்சியின் தனிக் கூட்டமொன்றில், 'பட்டம் தாணு பிள்ளையின் தலைமையில் உள்ள தற்போதைய மந்திரி சபை, பி.–சோ. கட்சியின் அடிப்படைத் தத்துவங்களுக்கு விரோதமாக நடந்து வருகிறது' என்று தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

இத் தீர்மானத்தை நகரச் செயலாளர் வேணுகோபாலன் முன்மொழிந்தார்.

"பட்டம் தாணுவின் மந்திரி சபையின் கொள்கை, இந்தியாவின் வருங்கால ஜனநாயக சோஷலிச அமைப்பையே பாதிக்கும்," என்று கிளைக் கழகத்தினர் கருதுகின்றனர் என்று தெரிகிறது.

காஷ்மீரில் அசோக் மேத்தா தாக்கப்பட்டதைக் கண்டித்தும், திருச்சூருக்கு அருகே போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைக் கண்டித்தும் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

டாக்டர் ராம்மனேகர் லோகியா, லக்னேவில் நிருபர்களிடையே பேசுகையில், "திரு–கொச்சி மந்திரி சபையின் ராஜினமா, இந்தியாவில் அரசியல் சுதந்திரப் பாதைக்கு வழி கோலுமென்றும், அது சிறந்த அரசியல் நிகழ்ச்சியாக இருக்குமென்றும், அதன் பயனக உண்மை, மனிதத் தன்மை, ஜனநாயகம் இவைகள் நாட்டில் வளர ஏதுவாகுமென்றும் கூறியுள்ளார்.

கவுந்தப்பாடியில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சென்று, தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் யாவருக்கும் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளித்தனர்.

பொதுச்செயலாளர் அண்ணுதுரை, தோழர்கள் கே. ஆர். ராமசாமி, அ. பொன்னம்பலனுர், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் தி. மு. க. கொள்கைகளை விளக்கி, அக்கொள்கைகள் பரவுவதற்கு யாவரும் பேராதரவு தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டதுடன் கழகத் தோழர்களின் வரவேற்புக்கு நன்றியும் தெரிவித்துக் கொண்டனர்.

★

பெயர் சூட்டல்

கவுந்தப்பாடி தி. மு. க. செயலாளர் துரை அவர்கள் பெண் மகவுக்கு 'அன்புமணி' என்று பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்கள் பெயர் சூட்டினுர்கள் இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2/ அன்புடன் உதவினுர்கள்.

திரு. தங்கவேல் அவர்கள் பெண் குழந்தைக்கு "மரகதமணி" என்று பெயர் சூட்டினுர்கள்.

பாகிஸ்தான் - ஆப்கன் கூட்டுப் பாதுகாப்பு

ஒப்பந்தம் ஏற்படும்?

பாகிஸ்தான் உள்நாட்டமைச்சர் இஸ்கந்தர் மிர்சா நிருபர்களிடம் பேசுகையில் பாகிஸ்தான் – ஆப்கனிஸ்தான் ஆகிய இருநாடுகளிடையே கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று ஏற்படலாம் என்று குறிப்பிட்டார்.

இதுபற்றி ஆப்கன் வெளிநாட்டமைச்சர் கராச்சி வந்திருந்தபோது பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

உங்கள் குறிப்புக்கு!

சென்னை நகரில் சுமார் 55 வழிகளில் (ரூட்) மொத்தம் 305 பஸ்கள் ஓடுகின்றன. சர்க்கார் போக்குவரத்தில் மொத்தம் 309 பஸ்கள் இருக்கின்றன; இவற்றுள் சுமார் 35 பஸ்கள் பழுது பார்ப்பதிலும், முன்னெச்சரிக்கைப் பரிசீலனையிலும் இருந்து வருவது வழக்கம்.

சியாங் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதின் எதிரொலி!

ரஷ்யா மூலகாரணமா?

பரிசீலனைகள் நடைபெறுகின்றன

சியாங்கின் 'தைப்பிங்' எனும் ஒரு யுத்தக் கப்பலை, கம்யூனிஸ்டு சீனவின் 4 டார்பிடோ படகுகள் சேர்ந்து தாக்கி, கப்பலை கடலுக்குள் மூழ்கடித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி சியாங் சர்க்கார், அமெரிக்காவுடன் கலந்தாலோசிப்பதாகவும், சோவியத் நாட்டின் டார்பிடோக்களையும், இதர ஆயுதங்களையும் கம்யூனிஸ்டு சீன உபயோகித்துக்கொண்டு வருவதாகக் கூறப்படும் தகவல்களைச் சியாங் பரிசீலனை செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவங்களுக்கெல்லாம் ரஷ்யாதான் மூல காரணமாக இருந்து, உலகின் மற்ற சுதந்திரத் தனி நாடுகளைச் சவாலுக்கு அழைக்கிறது என்றும், அமெரிக்காவின் செல்வாக்கை எவ்விதத்திலும் தகர்த்தெறிய வேண்டுமென்பதே ரஷ்யாவின் நோக்கம் என்றும், சியாங் சர்க்காரின் உத்தியோக வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

பிறந்த தினப் பரிசுகள்

இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரின் பிறந்த தினத்தையொட்டி, சமுதாய நலத் திட்டம், தேசீய விஸ்தரிப்புப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களால், நேருவுக்கு சுமார் ரூ. 50 லட்சம் பெறுமானமுள்ள வெகுமதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளனவாம். இவ்வெகுமானங்கள் யாவும் பாடசாலைகளுக்கான நிலம், புத்தகசாலைகளுக்கு வேண்டிய புத்தகங்கள், உபகரணங்கள், மற்றும் விளையாட்டுப் பயிற்சி நிலையங்கள், அதற்கான பொருட்கள் ஆகியவைகளாக இருக்கும்.

தெரு முனைகளில் பொதுக் கூட்டம்

போலீசார் கவலை!

தெரு முனைகளிலும், பொது நடைபாதைகளிலும் பொதுக் கூட்டங்கள் நடைபெறுவது, இடைஞ்சலாயிருக்கிறது என்று சென்னை நகர போலீசாருக்கு புகார்கள் வந்துள்ளனவாம்.

அம்மாதிரி தெரு முனைகளில் கூட்டம் கூட்டுவது குற்றமாகும் என்று அண்மையில் போலீசார் குறிப்பொன்று வெளியிட்டிருந்தாராம். எச்சரிக்கை விடுத்த பின்னரும் ஒலிபெருக்கி வசதிகளுடன் பொதுக் கூட்டங்கள் நடைபெறுவதாக தகவல் கிடைத்துள்ளதாம்.

எனவே இதுபற்றி சர்க்கார் சீக்கிரமே அறிவிப்புத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

அபிவிருத்திக்கு அணுசக்தி

தொழில், பொருளாதார அபிவிருத்திக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவது சம்மந்தமாக அடுத்த திங்கள் 2-ந் தேதியன்று, புதுடில்லியில், இந்தியாவிலுள்ள உயர்தர அணுசக்தி விஞ்ஞானிகளின் மாநாடொன்று, தொடர்ந்து இரு தினங்களாக நடைபெறும். இம்மாநாட்டுக்குப் பண்டித நேரு தலைமை தாங்குவார் என்று தெரிய வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம். ஏ.